

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் 1000 'முதல்வர் மருந்தகங்களை' காணொலி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து மதுரை மாநகராட்சி செனாய் நகரில் உள்ள முதல்வர் மருந்தகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனி வேல் தியாகராஜன் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா, வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி மருந்தகத்தை பார்வையிட்டு முதல் விற்பனையை துவக்கி வைத்தார்கள். உடன் மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன் வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருச்செந்தூர் வட்டம் வீரபாண்டிய பட்டினத்தில் விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக கால்பந்துப் போட்டியினை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்..ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார். உடன் வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் மற்றும் நகர்மன்ற துணைத் தலைவர் செங்குழி,. ஏ.பி..ரமேஷ்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,நகரச் செயலாளர் திரு வாள் சுடலை,உடன்குடி ஒன்றிய செயலாளர் இளங்கோ,ஆழ்வை ஜனகர்,மாவட்ட விளையாட்டுத் துறை சதிஷ்,விளையாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மேலூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, பிப். 25 -

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையை பறித்து இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதுரை வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் இன்று (25ஆம் தேதி) மேலூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார் அதன் விபரம்

ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மாணவர்களின் நலனில் அக்கறை கொள்ளாமல், பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்காமல் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இதற்கு கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாடு முழுவதும் எதிர்ப்பு அலைகள் அதிகரித்து வருகின்றன.


அதன் ஒரு பகுதியாக தலைமைக் கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் நாளை 25ஆம் தேதி காலை 9.30 மணி அளவில் மேலூரில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகம் அருகில் அமைந்திருக்கும் மேலூர் தலைமை தபால் நிலையம் முன்பாக ஒன்றிய பாசிச பா.ஜக. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்கு மாணவர் அணியினர், மாணவர் அமைப்பினர், மாணவர்கள் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக, செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இன்று (25ஆம் தேதி) காரைக்குடியில்

# சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, பிப். 25 -

காரைக்குடியில் இன்று (25.2.2025 -செவ்வாய்க்கிழமை) சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் , கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (25.2.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டிணன் அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

**பொருள்:** வருகிற மார்ச் 1ம் தேதி கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து.

பி எல் சி. பாகநிலை முகவர்கள் குறித்து.

கழக வளர்ச்சி பணிகள் .

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகி கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் , சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் .

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திருமங்கலத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கை!



மதுரை, பிப். 25 -

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் தமிழ்நாட்டு மாணவர்களின் வாழ்க்கைக்கு அநீதி இளைக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து திருமங்கலத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்

அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப் போர்க்கு நிர்ப்பந்திக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதுரை தெற்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் , இன்று (25.02.2025-செவ்வாய்க் கிழமை ) காலை 9 மணியளவில் திருமங்கலம் பெரியார் சிலையிலிருந்து பேரணியாகப் புறப்பட்டு பாரத ஸ்டேட் வங்கி முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மதுரை தெற்கு மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் பாண்டிமுருகன் தலைமையில் நடைபெறுகிறது

எழுச்சிமிக்க இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மாணவர் அணியினர், மாணவ அமைப்பினர், மாணவர்கள் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் நிர்வாகிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் நிர்வாகிகள், மாணவர் அணி, இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதி கள், பாக முகவர் BLA2, பாக முகவர்கள் BLC, கழக முன்னோ டிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி நகரில் ஒன்றிய, பேரூர் தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசின் மும்மொழி கல்வி திட்டத்தை எதிர்த்து ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் வழிகாட்டுதலின்படி, கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் தலைமையில், பேரூர் செயலாளர் சரவணன் முன்னிலையில் ஏராளமான கட்சி நிர்வாகிகள் ஆண்டிபட்டி பேருந்து நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முன்னதாக ஆண்டிபட்டி கட்சி அலுவலகத்தில் இருந்து பேருந்து நிலையம் வரை ஒன்றிய அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி ஊர்வலமாக சென்றனர். இதில் முன்னாள் எம்.எல்.ஏ. ஆசையன் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேது ராஜா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரகாஷ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஜி கே பாண்டியன், இளைஞரணி சிவா மற்றும் ஒன்றிய, நகர, சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தேனி தெற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தேனி, பிப். 25 -

தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி தெற்கு மாவட்டக் கழக கூட்டம் இன்று (25.02.2025 - செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.மனோகரன் தலைமையில், கம்பம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஏ.ஜெயன், ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் முத்துக்குமார் முன்னிலையில் சின்ன மனூர் ஆர். எம்.எஸ்.வேலுச்சாமி பிள்ளை திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

**பொருள் :** கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

# பல்லாவரம் வடக்குப் பகுதி கழக செயற்குழுக் கூட்டம்!

## தீர்மானங்களை விளக்கி – பகுதிக் கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை அறிக்கை!

பல்லாவரம், பிப். 25 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கட்டளையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் 23.2.2025 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணி அளவில் ச.சிவக்குமார் தலைமையில் பகுதி கழக நிர்வாகிகள் வ.முத்து, எஸ்.நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி கலந்து கொண்டு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை மார்ச் 1 முதல் எவ்வாறு பகுதி முழுவதும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடுவது என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர பிரதிநிதிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், வட்ட அணிகளின் செயலாளர்கள், நிர்வாகிகள், தேர்தல் முகவர்கள், பி.எல்.ஏ.2 தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை குறித்து பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பேசியது வருமாறு:-

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைப்படி பகுதி முழுவதும் எவ்வாறு மார்ச் -1 முதல் நமது தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் வருமாறு:-

வருகிற மார்ச்-1 அன்று பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் தன் உழைப்பால் நாம் தாய் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கும் தமிழ்நாடு மக்கள் சமூகத்திலும் பொருளாதாரத்தை உயர்ந்த நிலை அடைவதற்கும் பாடுபடும் திராவிட மாடல் முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பல்லாவரம் வடக்கு பகுதி கழகத்துக்கு உட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கழகக் கொடியேற்றி ஒளியும் ஒலிய அமைத்து பொது மக்கள் இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கியும் நல திட்ட உதவிகள் செய்தும் அனைத்து வட்டங்களிலும் தலைவர் அவர்களின் பிறந்தநாளை மிக வும் எழுச்சியுடன் கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.




நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஏழை,எளிய,மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக கொண்டாடுவது, மற்றும் பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம், ஆ.பிரபாகரன்,சித்திக், பொருளாளர் ஜார்ஜ் கோசல், துணைச் செயலாளர் நம்பி, பொதுக்குழு உறுப்பினர்கள் சாந்தி,அபுபக்கர்,மீனவரணி எரிக்ஜுடு ஆகியோர் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சி.முத்துசாமி

### பிப்ரவரி 25 (2018)



மாணவப் பருவத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழக மாணவர் அணியில் சேர்ந்து, பின்னர் மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர், வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர், இருமுறை நகர செயலாளர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கழக தீர்மானக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், அர்பன் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையில் கழகம் கம்பீரமாக நிற்பதற்கு முத்துசாமி போன்றவர்கள்தான் காரணம்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**